நீதி அமைச்சின் சுற்றறிக்கை : 02/2023

எனது இல. MOJ/E9/பி.க.தி./2021

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

கொழும்பு 10

2023.07.10

சகல மேல் நீதிமன்ற நீதிபதிகள்,

சகல மாவட்ட நீதிபதிகள்,

சகல மாவட்ட நீதவான்கள்,

சகல தொழில் நியாயசபைகளின் தவிசாளர்கள்,

பதிவாளர், உயர் நீதிமன்றம்,

பதிவாளர், மேன்முறையீட்டு நீதிமன்றம்.

**நீதிமன்றம் மற்றும் தொழில் நியாய சபைகளினால் விநியோகிக்கப்படுகின்ற பிரதிகளுக்கான கட்டணங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்**

2022.12.20 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை 01/2020(II), 2022 இன் 18 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்த)ச் சட்டத்தின் 442 ஆம் பிரிவு, குடியியல் நடவடிக்கைமுறை சடடக் கோவையின் 205 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, 2,340 ஆம் இலக்க 2023.07.07 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கு அமைய, நீதிமன்ற வழக்குத் தீர்ப்பு அல்லது இறுதி உத்தரவு மூலம் பாதிக்கப்பட்டுள்ள யாராயினும் ஆளொருவரினால், மேற்படி தீர்ப்பின் அல்லது இறுதி உத்தரவின் அல்லது யாதாயினுமொரு வாக்குமூலம் அல்லது மேற்படி வழக்கு அறிக்கையின் வேறொரு பகுதியின் பிரதியை கோரும் பட்சத்தில், யாதாயினுமோரு விசேட காரணத்தினால் அதனை கட்டணம் அறவிடாது பெற்றுக் கொடுப்பது உகந்தது என்று நீதிமன்றம் கருதாத சந்தர்ப்பங்களில், மேற்படி பிரதிகளை விநியோகிப்பதற்காக தற்போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன.

01. **சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்**

1.1 பிரதிபண்ணி இயந்திரம் மூலம் (Photo copy machine) பெற்றுக் கொண்டு விநியோகிக்கப்படுகின்ற சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதித் தாளுக்கு ரூபா 12.00 ஆன கட்டணம் மற்றும் ஒரு தாளின் ஒரு பக்கத்துக்கு ரூபா 8.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இவ்வாறு அறவிடப்படுகின்ற கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | பிரதி எடுக்கும் அலுவலருக்கு | 10% |
| II. | சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 5% |
| III. | அரச கட்டணம் | 85% |

1.2 சமர்ப்பிக்கப்படுகின்ற பிரதிகளை சான்றுப்படுத்தும் போது ஒரு தாளுக்கு ரூபா 7.00 ஆன கட்டணம் மற்றும் ஒரு தாளின் ஒரு பக்கத்துக்கு ரூபா 4.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இவ்வாறு அறவிடப்படுகின்ற கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | ஒப்பிட்டுப் பார்க்கும் அலுவலருக்கு | 20.84% |
| II. | சான்றுப்படுத்தும் அலுவலருக்கு | 20.84% |

III. அரச கட்டணம் 58.32%

1.3 கணிணியொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த தட்டெழுத்து செய்யப்பட்ட ஒரு ஆவணத்தின் ஒரு தாளின் அச்சிடப்பட்ட பிரதிக்கு ரூபா 17.00 ஆன கட்டணம் மற்றும் ஒரு தாளின் ஒரு பக்கத்துக்கு ரூபா 12.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும். இவ்வாறு அறவிடப்படுகின்ற கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

I. பிரதி எடுக்கும் அலுவலருக்கு 7 %
II. சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 3.5 %
III. அரச கட்டணம் 89.5 %

## 02. <u>பிரதிகளை தட்டெழுத்து செய்தல் மற்றும் சான்றுப்படுத்தும் கட்டணங்கள்</u>

தட்டெழுத்து செய்யும் இயந்திரம் மூலம் விநியோகிக்கப்படுகின்ற சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கு பின்வருமாறு கட்டணம் அறவிடுதல் வேண்டும்.

2.1 தட்டெழுத்து செய்யும் 25 வரிகளுக்கு மேற்பட்ட ஒரு பக்கத்துக்கு ரூபா 30.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

I. தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு 30%
II. சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 18%
III. அரச கட்டணம் 52%

2.2 தட்டெழுத்து செய்யும் 15 முதல் 25 வரையான வரிகளுக்கு ரூபா 25.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

I. தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு 24%
II. சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 14.4%
III. அரச கட்டணம் 61.6%

2.3 தட்டெழுத்து செய்யும் 15 வரிகளுக்கு குறைவான ஒரு பக்கத்துக்கு ரூபா 22.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

I. தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு 18.19%
II. சரிபிழை பார்த்து சான்றுப்படுத்தும் அலுவலருக்கு 10.91%
III. அரச கட்டணம் 70.9%

## 03. <u>காபன் பிரதிகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்</u>

காபன் பிரதிகளின் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிக்கும் போது பின்வருமாறு கட்டணங்களை அறவிடுதல் வேண்டும்.

3.1 25 வரிகளுக்கு மேற்பட்ட ஒரு பக்கத்துக்கு ரூபா 13.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

I. தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு 26.96%
II. அரச கட்டணம் 73.04%

3.2 15 முதல் 25 வரையான வரிகளுக்கு ரூபா 12.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு | 20.84% |
| II. | அரச கட்டணம் | 79.16% |

3.3 15 வரிகளுக்கு குறைவான ஒரு பக்கத்துக்கு ரூபா 11.00 ஆன கட்டணத்தை அறவிடுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டணம் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டு கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | தட்டெழுத்துச் செய்யும் அலுவலருக்கு | 13.64% |
| II. | அரச கட்டணம் | 86.36% |

04. கணினி இயந்திரம் அல்லது தட்டெழுத்து இயந்திரத்தைப் பயன்படுத்தி தட்டெழுத்து செய்து சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிக்கும் போது முதலாவது பிரதிக்கு மேலே 02 ஆம் இலக்க பந்தியிலுள்ளவாறு கட்டணம் அறவிடல் வேண்டும் என்பதுடன், இதன் போது குறித்த பிரதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக மேற்படி ஆவணம் தட்டெழுத்து செய்யப்பட்டுள்ளதென்று குறித்த உறுதிச்சீட்டை சிபாரிசு செய்யும் அலுவலர் தனிப்பட்ட வகையில் திருப்தியுறல் வேண்டும்.

05. பிரதி செய்தல் கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக பிரதி செய்யும் கட்டணங்களை அறவிடும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சரியான வகுதியின் கீழ் பிரதி செய்யும் கட்டணம் அறவிடப்படுவதாக பிரதி செய்யும் கட்டணங்களை அறவிட்டுக் கொள்ளும் அலுவலர் தனிப்பட்ட வகையில் திருப்தியுறல் வேண்டும்.

06. சந்தையில் எழுதுகருவிகளின் விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதன் காரணமாக சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிக்கும் கட்டணங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் காரணமாக பொது மக்கள் தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்படுகின்ற செலவினம் பாரியளவில் அதிகரிப்பதை தடுத்துக் கொள்ளும் நோக்கத்துடன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிப்பதில் பங்கேற்கும் அலுவலர்களுக்கு தற்போது செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

07. சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிப்பதன் மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் முறையாக கிடைக்கின்றதா என்பது பற்றி உள்ளகக் கணக்காய்வின் போது அடிக்கடி பரிசீலித்துப் பார்த்தல் வேண்டும்.

08. கடமை நேரங்களின் பின்னர் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விநியோகிப்பதற்குரிய கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அலுவலர்களுக்கு, அதற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு அல்லது வேறு எந்தவொரு கொடுப்பனவையும் செலுத்தாததன் அடிப்படையில் மேற்படி கொடுப்பனவுகளை செலுத்தல் வேண்டும்.

09. அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் PFD/RED/REG/F&C/2023/Justice ஆம் இலக்க 2023.05.22 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய மேற்படி கட்டணங்களை அறவிடுவதன் மூலம் கிடைக்கின்ற சகல வருமானங்களும், வருமானத் தலைப்பு 2003-99-00 இன் கீழ் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்தல் வேண்டும் என்பதுடன், சகல செலவினங்களையும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் மூலம் ஏற்பாடு செய்துகொள்ளல் வேண்டும் என்பதனால் எழுதுகருவிகள் மற்றும் அச்சிடும் மூலம் பொருட்களுக்கான செலவினத்தை வருடாந்த வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் மூலம் ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

10. சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கு விண்ணப்பிக்கின்ற திகதி முதல் ஒரு வார காலப்பகுதிக்குள் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். இக்கட்டணங்களை அறவிடுதல் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய முறையான அறிக்கையொன்றை குறித்த நீதிமன்றத்தின் கணக்காளர் /பதிவாளர் பேணிவருதல் வேண்டும் என்பதுடன், அறவிடப்படுகின்ற கட்டணங்களுக்கான பற்றுச்சீட்டும் வழங்கப்படுதல் வேண்டும்.

11. 1997.10.07 ஆம் திகதிய 13/97 ஆம் இலக்க நீதி அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 1998.01.06 ஆம் திகதிய 1/98 ஆம் இலக்க நீதி அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2006.06.01 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க நீதி அமைச்சின் சுற்றறிக்கை ஆகியன இத்தால் செல்லுபடியற்றதாக்கப்படுகின்றன.

12. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2023.07.07 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும்.

செயலாளர்

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

பிரதி :

1. செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழு
2. பிரதம நிதி அலுவலர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.